Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-1**

Name : வத்துமலை
Father / Husband name : ராமசாமி
Village : கீழ்மாவிலங்கை
Age : 91
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 23.02.2026

A1, A2 present. Defence counsel present. HC present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று ஊர்பொதுமக்கள் சுமார் 100 பேர் திருவிழா வரவு செலவு கணக்கு பார்க்கும்போது இருந்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி வரவு செலவு கணக்குகள் சரியாக இல்லை என்று கேட்டார் என்றால் சரியல்ல, கணக்கு புத்தகத்தை கேட்டார் அவர்கள் கொடுத்தார்கள், 1வது எதிரி அதனை பெற்றுக்கொண்டு தூக்கிப்போட்டுவிட்டார். எதற்காக 1வது எதிரி கணக்கு வழக்குகள் சரியாக இல்லை என்று புத்தகத்தை தூக்கிப்போட்டாரா என்றால் இல்லை, வாங்கியவுடன் தூக்கிப்போட்டார். 1வது எதிரி கோவில் செலவிற்கு பணம் கொடுப்பாரா என்றால் தெரியாது. எனக்கும் 1வது எதிரிக்கும் இந்த சம்வத்திற்கு முன்பு விரோதம் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரி கணக்கு நோட்டை தூக்கிப்போட்டவுடன் ஊர்க்காரர்கள் அனைவரும் 1வது எதிரியை அடித்தார்கள் என்றால் இல்லை, சுமார் 4 நபர்கள் அடித்தார்கள். அவர்களின் பெயர் என்ன என்றால் தெரியாது.

2. என்னை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு யார் அழைத்துச்சென்றது என்றால் எனது பேத்தியின் கணவர் அழைத்துச்சென்றார், அவரின் பெயர் நினைவில்லை. திண்டிவனம் அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள்

சிகிச்சையிலிருந்தேன் என்றால் அங்கு சிகிச்சை அளித்துவிட்டு அன்றையதினமே மேல்சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். எத்தனை நாட்கள் மேல்சிகிச்சையிலிருந்தேன் என்றால் தையல் போட்டு உடனே அனுப்பிவிட்டார்கள். மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ரசீதுகள் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் மருத்துவமனையிலிருந்து வந்தபிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் 4 ம் தேதி விசாரித்தார்கள். திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு மேல்சிகிச்சைக்கு எடுத்துக்கொண்டு வந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். திண்டிவனம் மற்றும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைகளில் எப்படி ஏற்பட்டக்காயம் பற்றி நான் தான் மருத்துவரிடம் சொன்னேன் என்றால் எனது பேத்தியின் கணவர் சொன்னார். எனது பேத்தியின் கணவர் மருத்துவமனைக்கு என்னை அழைத்துச்செல்லவில்லை என்றால் இல்லை, சத்தியமாக அவர் தான் என்னை அழைத்தச்சென்றார். அதனால் தான் எனது பேத்தியின் கணவர் பெயர் தெரியவில்லை என்றால் சரியல்ல.

3. திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்களா என்றால் விசாரித்தார்கள், எழுதினார்களா என்று தெரியாது. போலிசார் என்னை கையொப்பம் வாங்கினார்களா என்றால் நினைவில்லை, வாங்கியிருப்பார்கள். எத்தனை கையொப்பம் போட்டேன் என்று தெரியுமா என்றால் நினைவில்லை. நான் கையொப்பம் செய்தபோது நேரம் என்ன இருக்கும் என்றால் தெரியாது. 1வது எதிரிக்கும் எனக்கும் எந்தவித சண்டையும் இல்லை என்றால் சரிதான். நான் 1வது எதிரியை நோட்டை எதற்காக தூக்கிப்போட்டேன் என்று கேட்டேனா என்றால் இல்லை. 1வது எதிரியை தான் ஊர்க்காரர்கள் 10 நபர்கள் அடித்துவிட்டார்கள், அங்கு உட்கார்ந்திருந்த எனக்கும் காயம்பட்டது, 1வது எதிரி அடித்து எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

4. 1வது எதிரி புகார் கொடுத்துவிடுவார் என்று ஊர்க்காரர்கள் என்னை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளார்கள், அதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சத்தியமாக இல்லை. மருத்துவரிடம் 5 நபர்கள் அடித்துவிட்டதாக சொல்லி சிகிச்சை எடுத்துக்கொண்டு தற்போது 1 நபர் அடித்துவிட்டதாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 18 தையல் போட்டதற்கு ஆதரமாக போலிசாரிட் ஆவணம் கொடுத்தேனா என்றால் இல்லை, எனது அம்மா சத்தியமாக பொய் சொல்லமாட்டேன். ஊர்க்காரர்களை காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-8**

Name : சங்கீதா
Father / Husband name : முருகன்
Village : கீழ்மாவிலங்கை
Age : 37
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 23.02.2026

A1, A2 present. Defence counsel present. HC present.

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. திருவிழாக்கூட்டம் நடந்தயிடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் இரண்டு தெரு தள்ளி உள்ளது. திருவிழாக்கூட்டத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 லட்சுமணன் எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். திருவிழாக்கூட்டத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். திருவிழா செய்வதில் 1வது எதிரி மற்றும் ஊர்க்காரர்கள் பங்கு கொடுத்து செய்வார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி திருவிழா செய்ததில் கணக்கு சரியில்லை என்று கேட்டதால் தான் பிரச்சனை என்றால் சரிதான். ஏன் நோட்டை தூக்கிப்போட்டாய் என்று 1வது எதிரியை ஊர்க்காரர்கள் அடித்து சண்டையானது என்றால் சரிதான். ஊர்க்காரர்கள் சேர்ந்து அடித்ததில் எனது தம்பி அ.சா.1 ம் இருந்தார் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் சாட்சி முருகன், முனுசாமி, ராஜி, பாண்டியராஜன், அபரஞ்சி ஆகியோர்கள் திருவிழாக்கூட்டத்தில் இருந்தவர்கள், அவர்களுக்கும் 1வது எதிரிக்கம் கைகலப்பு ஆனது என்றால் சரிதான். ஊர்க்காரர்கள் அனைவரும் சேர்ந்து 1வது எதிரியை அடித்துவிட்டதாக புகார் கொடுத்து அந்த விசாரணைக்கு நானும் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். ஊர்க்காரர்களை அழைத்து

விசாரித்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரித்தபோது 1வது எதிரியும் இருந்தார், அப்போது நேரம் காலை 9 மணி இருக்கும் என்றால் சரிதான், காலை 10 மணி இருக்கும். எனக்கும் காயம்பட்டதற்கு என்னிடம் புகார் கெட்டார்களா, நான் கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் நான் கையொப்பம் செய்துகொடுத்தேன். நடந்தவிவரங்களை விசாரித்து கேட்டு எழுதி புகார் வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்து காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. நான் காவல் நிலையத்திலிருந்தபோது ராஜீ, அபரஞ்சி ஆகியோர்கள் இருந்தார்கள், அவர்களிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்துச்சென்றது என்றால் ராஜீ என்பவர் அழைத்துச்சென்றார். மறுநாள் நான் காவல் நிலையம் சென்றேபாது வத்துமலை வந்தாரா என்றால் வந்தார். வத்துமலையிடம் விசாரித்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் நினைவில்லை. வத்துமலையிடம் விசாரித்து எழுதினர்களா என்றால் நினைவில்லை. காவல் நிலையம் சென்றபோது ஊர்க்காரர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்ட ஆடைகளை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் காண்பித்தேன், ஆடைகளை கொடுக்கவில்லை. எனது முதல் விசாரணையில் செங்கல்லால் அடித்ததாக சொல்லியுள்ளேன், அதனை எடுத்து போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

4. 1வது எதிரி ஊர்க்காரர்களிடம் கணக்கு வழக்குகள் பற்றி கேட்டபோது ஊர்க்காரர்கள் சேர்ந்து 1வது எதிரியை அடித்துவிட்டு அதிலிருந்து தப்பிக்க பொய்யான புகார் கொடுத்து அதற்கான நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டக்காயம் எனது தம்பி 1வது எதிரியை அடிக்கச்சென்றபோது அதில் ஏற்பட்டக்காயம், 1வது எதிரி என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையை சொல்லி கொடுத்த புகாரை

போலிசார் மறைத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் 1வது எதிரி அடித்ததாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.